அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு – 2023

பாடம்: நடனம் (பரதம்)  தரம்: நான்கு

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி ஒன்று

சுட்டெண்:......................

**பகுதி I இல் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.**

**பகுதி II இல் முதலாவது வினாவிற்கும், ஏனையவற்றுள் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. பாத்ர அந்தப்பிராணன்களுள் அடங்குவது
   அ. விரைவு, உறுதி, வடிவம்  ஆ. சுருதி, கிண்கிணி, கீதம்
   இ. இடை, பக்கம், பாதம்  ஈ. தாளம், குழல், வீணை

2. ஆடை, ஆபரணங்களால் கருத்தை வெளிப்படுத்துவது
   அ. வாசிக அபிநயம்  ஆ. சாத்விக அபிநயம்
   இ. ஆங்கிக அபிநயம்  ஈ. ஆஹார்ய அபிநயம்

3. ப்ரமரி எனப்படுவது
   அ. நடத்தல்  ஆ. பாய்தல்
   இ. சுற்றுதல்  ஈ. துள்ளுதல்

4. தஞ்சை நால்வரின் தந்தையார் பெயர்
   அ. சிதம்பரம்  ஆ. சுப்பராயர்
   இ. சபாபதி  ஈ. இராமலிங்கம்

5. “சப்தம்” என்ற உருப்படி அமைந்துள்ள தாளம்
   அ. மிஸ்ரசாபு  ஆ. திஸ்ரஏகம்
   இ. கண்டசாபு  ஈ. ரூபகம்

6. நீர் கற்ற உருப்படிகளில் நிருத்த உருப்படிக்குள் அடங்குவது
   அ. சப்தம்  ஆ. பதம்
   இ. கீர்த்தனம்  ஈ. தில்லானா

7. பிரம்ம தேவர் நாட்டியத்தை உருவாக்குவதற்கு கீதத்தை எந்த வேதத்தில் இருந்து எடுத்தார்?

அ. இருக்கு　　ஆ. யசுர்

இ. சாமம்　　ஈ. அதர்வணம்

8. பஞ்சபாணத்தினைக் கொண்ட தேவஹஸ்தம்

அ. மன்மதன்　　ஆ. லஷ்மி

இ. சிவன்　　ஈ. கணபதி

9. இரண்டு தட்டுகளிற்கு இடையே உள்ள இடைவெளி

அ. கதி　　ஆ. ஜதி

இ. அட்சரம்　　ஈ. ஜாதி

10. தாளத்தின் வேகத்தை சீராக்குவது

அ. லயம்　　ஆ. அட்சரம்

இ. ஜாதி　　ஈ. யதி

11. பகிப்பிராணனில் அடங்குவது

அ. வீணை　　ஆ. உறுதி

இ. விரைவு　　ஈ. களைப்பின்மை

12. வலது கை சிகரம், இடது கையில் திரிசூலம் கொண்டு அபிநயிக்கும் தேவஹஸ்தம்

அ. சனீஸ்வரன்　　ஆ. முருகன்

இ. மன்மதன்　　ஈ. சிவன்

13. "ஷத்திரியர்" என அழைக்கப்படுபவர்

அ. இராஜகுலத்தவர்　　ஆ. பிராமணர்கள்

இ. மாடு மேய்ப்பவர்　　ஈ. வியாபாரிகள்

14. கண்கள் செல்லுமிடத்தில் ____________________ செல்ல வேண்டும்

அ. ரசம்　　ஆ. மனம்

இ. பாவம்　　ஈ. கைகள்

15. சிகரம், கர்த்தரிமுகம் முத்திரைகளால் செய்யப்படும் உறவுமுறைக் கை

அ. மைத்துனம்　　ஆ. அண்ணன் தம்பி

இ. தாய்　　ஈ. மாமன்

16. அபிநயம் எத்தனை பிரிவுகளைக் கொண்டது?

அ. 4 ஆ. 9

இ. 7 ஈ. 10

17. "அஸ்வோத்ப்ளவனம்" எந்த வகையான பாத பேதத்தில் அடங்கும்?

அ. ஸ்தானகம் ஆ. மண்டலம்

இ. ப்ரமரி ஈ. உத்ப்ளவனம்

18. இரு கைகளிலும் சிகர முத்திரை கொண்டு அபிநயிக்கும் ஹஸ்தங்கள்

அ. பிராமணர், வியாழன் ஆ. வெள்ளி, பிராமணர்

இ. வியாழன், ஷத்திரியர் ஈ. பிராமணர், சனி

19. உபாங்கத்தில் அடங்கும் உறுப்பு

அ. தலை ஆ. மார்பு

இ. இடை ஈ. கண்கள்

20. உத்ப்ளவன பேதம் எத்தனை வகைப்படும்?

அ. 6 ஆ. 5

இ. 10 ஈ. 9

21. நாயகன், நாயகி பாவத்தை பிரதானமாகக் கொண்ட உருப்படி

அ. கீர்த்தனம் ஆ. பதம்

இ. தில்லானா ஈ. சப்தம்

22. சம்பிரதாய நாட்டியக் கச்சேரியில் இறுதியாக ஆடப்படும் உருப்படி

அ. தில்லானா ஆ. கீர்த்தனம்

இ. ஜதீஸ்வரம் ஈ. குறத்தி நடனம்

23. "அபிநயதர்ப்பணம்" எனும் நூலை எழுதியவர்

அ. பரதமுனிவர் ஆ. நந்திகேஸ்வரர்

இ. நாரதர் ஈ. ஆதிவாயிலார்

24. முடிவடைவு எனப்படுவது

அ. நாட்டடவு　　　ஆ. கிடதகதரிகிட தொம்

இ. தாஹத்த ஜெம்தரி தா　　　ஈ. தெய்ஹத் தெய்ஹி

25. புகழ்ச்சி என்ற ரீதியில் ஆடப்படும் உருப்படி

அ. கீர்த்தனை　　　ஆ. பதம்

இ. அலாரிப்பு　　　ஈ. ஜதீஸ்வரம்

26. அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் ஆரம்பித்த ஆண்டு

அ. 2000　　　ஆ. 2002

இ. 1998　　　ஈ. 2001

27. ஜதியினைத் தொடர்ந்து கோர்வைகளாக உருவாக்கப்பட்ட நடன உருப்படி

அ. புஸ்பாஞ்சலி　　　ஆ. பதம்

இ. தில்லானா　　　ஈ. ஜதீஸ்வரம்

28. வர்ணத்தின் இருபெரும் பிரிவுகள்

அ. பல்லவி, அனுபல்லவி　　　ஆ. பூர்வாங்கம், உத்தராங்கம்

இ. முத்தாயிஸ்வரம், சரணம்　　　ஈ. பல்லவி, சரணம்

29. கிண்கிணியின் ஆதி தெய்வம்

அ. சிவன்　　　ஆ. விஷ்ணு

இ. தாராகணம்　　　ஈ. ஈஸ்வரன்

30. இன்று வழக்கத்தில் இருக்கும் பரத நாட்டிய மரபினை ஒழுங்குபடுத்தியவர்

அ. பொன்னையா　　　ஆ. வடிவேலு

இ. சின்னையா　　　ஈ. சிவானந்தம்

(30×1=30 புள்ளிகள்)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2023

பாடம்: பரதம் (நடனம்) தரம்: நான்கு

## பகுதி இரண்டு

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

**முதலாவது வினாவிற்கும் ஏனையவற்றுள் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**

1. அ. பரதநாட்டிய மார்க்க உருப்படி ஒழுங்கினை எழுதுக.

   ஆ. நீர் கற்ற ஓர் **நிருத்த** உருப்படியினதும், **நிருத்திய** உருப்படியினதும் விரிவான விளக்கத்தை எழுதுக.

   இ. ஆதி அல்லது ரூபக தாளத்தில் 4 ஆவர்த்தனங்களிற்கு குறையாமல் தாள, அங்க குறியீட்டுடன் கோர்வை ஒன்றினை எழுதுக. (18 புள்ளிகள்)

2. அ. அபிநயம் என்றால் என்ன?

   ஆ. அவற்றின் பிரிவுகளை எழுதுக.

   இ. நீர் விரும்பிய இரண்டினை விரிவாக விளக்குக.

   (13 புள்ளிகள்)

3. அ. பாத பேதம் என்றால் என்ன?

   ஆ. அவற்றின் முக்கிய பிரிவுகளைக் குறிப்பிடுக.

   இ. மண்டல பேதத்தினை செய்முறையுடன் விளக்குக. (13 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றை விளக்குக.

   அ. கிண்கிணி இலட்சணம்

   ஆ. வர்ணத்தின் இலட்சணம்

   இ. சபை இலட்சணம்

   (13 புள்ளிகள்)

(ம.ப.பா)

5. அ. பாந்தவ்ய ஹஸ்தம் என்றால் என்ன?

ஆ. அவற்றில் ஐந்தினை எழுதுக.

இ. நவக்கிரஹ ஹஸ்தம் என்றால் என்ன?

ஈ. அவற்றினை ஒழுங்காக எழுதி, முத்திரைகளையும் எழுதுக. (13 புள்ளிகள்)

6. அ. தஞ்சை நால்வர் எனப்படுவோர் யார்?

ஆ. அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

இ. இவர்களில் நாட்டிய அடவு, கச்சேரி ஒழுங்குமுறைகளை வகுத்தவரின் வாழ்க்கை வரலாற்றினை 10 வசனங்களிற்கு குறையாமல் எழுதுக. (13 புள்ளிகள்)

7. அ. ஆங்கிக அபிநயத்தில் திரியாங்கள் எவை?

ஆ. அவற்றினை விரிவாக விளக்கி அட்டவணைப்படுத்துக.

இ. லயம் என்றால் என்ன? காலங்களையும் குறிப்பிடுக. (13 புள்ளிகள்)